## 100 நாள் வேலைத் திட்டம் – தேசத் தந்தை மகாத்மா காந்தி பெயரிலேயே தொடர வேண்டும்!

## இந்திய நாட்டின் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட – 2005–ஆம் ஆண்டின் விதிமுறைகளின் படியே

# ‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம்’ செயல்படுத்தப்பட வேண்டும்!

## சட்டப்பேரவையில் ‘அரசினர் தனித் தீர்மானத்தை’ முன்மொழிந்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, ஜன.24-

**சட்டப்பேரவையில் நேற்று, ‘100 நாள் வேலைத் திட்டம்’ குறித்த ‘அரசினர் தனித் தீர்மானத்தை’ முன்மொழிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில்,**

**“இந்திய நாட்டின் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட - 2005–ஆம் ஆண்டு விதிமுறைகளின்படியே “ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்” செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், “100 நாள் வேலைத் திட்டம், தேசத்தந்தை மகாத்மா காந்தி பெயரிலேயே தொடர வேண்டும்” என்றும் ஒன்றிய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்’ தொடர்பான அரசினர் தனித் தீர்மானத்தினை முன்மொழிந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதிலும் உள்ள கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை, மாநிலங்களின் நிதிக் கட்டமைப்பை, உள்ளாட்சி அமைப்புகளின் சுய சார்புத் தன்மையை, கிராமப்புற மகளிருக்கான வேலைவாய்ப்பைக் குலைக்கும் வண்ணம் ஒன்றிய அரசு அண்மையில் நிறைவேற்றியுள்ள மகாத்மா காந்தி ஊரக உறுதித் திட்டத்திற்கு மாற்றாகக் கொண்டுவந்துள்ள புதிய திட்டம் குறித்து இந்தப் பேரவையில் தங்கள் அனுமதியோடு சில முக்கிய விவரங்களைத் தெரிவிக்க விரும்பு கிறேன்.

தமிழ்நாட்டில், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் திட்டமாக இருந்தாலும், நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் திட்டமாக இருந்தாலும், அனைத்துத் திட்டங்களும் இது மாநில அரசின் திட்டம், ஒன்றிய அரசின் திட்டம் என்ற பாகுபாடு இல்லாமல் திறம்படச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் பல முன்னோடித் திட்டங்களில் இந்திய அளவில், தமிழ்நாடு அரசின் செயல்பாடுகள் முதன்மையாக இருப்பதோடு, பல்வேறு ஒன்றிய அமைச்சகங்களின் பாராட்டுக்களையும் தொடர்ந்து பெற்றுவருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும், ஒன்றிய அரசு, தமிழ்நாட்டை வஞ்சிப்பதையே கொள்கையாகக் கொண்டுள்ளது என்பதை நாம் தொடர்ச்சியாகக் கண்டு வருகிறோம்.



எந்தவொரு ஒன்றிய அரசின் திட்டமானாலும், பணி முன்னேற்றத்திற்கு ஏற்ப நிதி விடுவிப்பதைச் செய்யாமல் உடனடியாக நிதி விடுவிப்பதை வேண்டுமென்றே தவிர்த்து, காலதாமதத்தை ஏற்படுத்தி, தமிழ்நாட்டின் வளர்ச்சியில் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு ஒன்றிய அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திலும், கடந்த ஆண்டுகளை ஒப்பிடுகையில், 2025—2026-ஆம் ஆண்டில் தொழிலாளர் மதிப்பீடு மற்றும் நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவாகவே வழங்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ரூ.1,026 கோடி ஊதியத்திற்கான தொகையும், ரூ.1,087 கோடி பொருட்கூறுக்கான தொகையும் இன்றுவரை விடுவிக்கப்படாமலேயே உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இதே நிலைதான். வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் உயிர் நீர்த் திட்டத்திலும் இதுவரை ரூ.3,112 கோடி நிதி விடுவிக்கப்படாமல் பல மாதங்களாக நிலுவையில் உள்ளது. பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தில் ரூ.516 கோடி இன்னும் நிதி விடுவிக்கப்படாமல் உள்ளது.

இப்படி இவர்கள் தாமதிப்பதால் பாதிக்கப்படுவது யார்? தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளில் வாழக்கூடிய எளிய மக்கள் மற்றும் விவசாயிகள்தான். நம் மாநிலத்தின் மீது ஏன் இந்த ஓரவஞ்சனை என்றுதான் நாம் கேட்கிறோம். இந்த வஞ்சனையை எல்லாம் விஞ்சக்கூடிய அளவிற்கு, தற்போது ஒன்றிய அரசு, கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை அடியோடு வேரறுக்கக்கூடிய வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை மாற்றி, அதற்குப் பதிலாக “வளர்ச்சியடைந்த இந்தியா - ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டம்” என்று தமிழில் பொருள்படும் VB-G RAM G என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது.

ஏற்கெனவே இருந்த ‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்’ தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, ஊரகப் பகுதிகளில் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்கள் வேலையை உறுதி செய்தும், சராசரியாக, ஒவ்வொரு ஆண்டும் 65 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 74 இலட்சம் தொழிலாளர்கள் தங்கள் உடலுழைப்பைத் தந்து பயன்பெற்று வந்தனர். இதில் 85 விழுக்காட்டுக்கும் அதிகமானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், புதிதாக அறிமுகப்படுத்தப்படும் VB-G RAM G திட்டத்தை, அறிமுக நிலையிலேயே நமது நடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்திருக்கிறார்கள். அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றாகக் குரல் எழுப்பியிருக்கின்றன. எனினும் மக்கள் குரலை மதிக்காத ஒன்றிய அரசு, அந்தத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டது. இந்தப் புதிய திட்டமானது, மக்களின் தேவையின் அடிப்படையிலே அமைக்கப்படவில்லை. இது குறித்து நான் ஏற்கெனவே பிரதமர் அவர்களுக்கு கடந்த 18.12.2025 அன்று கடிதம் எழுதியிருக்கிறேன்.

இந்த புதிய வளர்ச்சியடைந்த இந்தியா - ஊரக வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்புக்கான உரிமை என்ற அடிப்படையில் இல்லாமல், ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்படவுள்ள உத்தேச ஒதுக்கீட்டின் படி வேலை வழங்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தங்கள் அனுமதியோடு இப்பேரவையில் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டு நான் முன்மொழிகிறேன்.

### அரசினர் தனித் தீர்மானம்

**“மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம், 2005-ன்படி, கிராமப்புற மக்களின் வேலைக்கான உரிமை (Right to Work) நிலைநாட்டப்பட வேண்டுமென்றும், மக்களின் வேலைக்கான தேவைக்கேற்பவும் (Demand for Employment) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மாநில செயல்திறன் அடிப்படையிலும் தொடர்ந்து நிதியொதுக்கீடு செய்வது உறுதி செய்யப்பட வேண்டுமென்றும்;**

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பெரும்பான்மையாக பலனடைந்து வந்த பெண்கள், மாற்றுத்திறனாளிகள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் தொடர்ந்து பாதுகாக்கப்பட, சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்திட முந்தைய ஆண்டுகளின் ஒதுக்கீட்டிற்குக் குறையாமல் ஒதுக்கீடு செய்யப்படுவது உறுதி செய்யப்பட வேண்டுமென்றும்;**

**உத்தேச மதிப்பீட்டின் அடிப்படையில் தன்னிச்சையாக ஒன்றிய அரசு நிதியொதுக்கீடு செய்யும் எனவுள்ள தற்போதைய புதிய நடைமுறையைக் கைவிட்டு, ஏற்கெனவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பின்பற்றப்பட்ட வேலைக்கான தேவைக்கேற்ப நிதியொதுக்கீடு செய்யும் நடைமுறையைத் தொடர வேண்டுமென்றும், மேலும், கூட்டாட்சித் தத்துவத்திற்கு மதிப்பளித்து, மாநிலங்களுக்கான ஒதுக்கீட்டினை, வேலைக்கான தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்கும் வழிமுறையை மாநில அரசே வகுத்துக்கொள்ள அனுமதியளிக்க வேண்டுமென்றும்;**

**இப்புதிய திட்டத்தில் மாநில அரசின் நிதிப்பங்களிப்பு 40 சதவிகிதமாக உயர்த்தப்படுகையில் மாநில அரசின் நிதிச்சுமையை கணிசமாக அதிகரிப்பதாக உள்ளது. எனவே, புதிய திட்டத்திற்கான நிதிப்பங்களிப்பு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான நிதிப்பங்களிப்பி னைப் போலவே திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்றும்;**

**தேசத்தந்தை மகாத்மா காந்தி அவர்களின் பெயரை நீக்கி, பல்வேறு உள்நோக்கங்களைக் கொண்டு இத்திட்டத்திற்கு ‘வளர்ச்சியடைந்த இந்தியா - ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் - ஊரகம் (VB-G-RAM-G)’ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி அவர்கள் இந்த தேசத்திற்கு வகுத்துத் தந்த கொள்கைகளையும், வழிகாட்டிய பாதையையும் எப்போதும் நினைவுகூரும் வகையில் இத்திட்டம் மகாத்மா காந்தி பெயரிலேயே தொடர வேண்டுமென்றும் ஒன்றிய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது.” (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)**

**இந்திய நாட்டின் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட, ‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005’-இன் விதிமுறைகளின்படியே ‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்’ தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்ற வகையில் மேற்படி தீர்மானத்தை இந்தச் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றித் தரவேண்டும் என்று அனைத்து உறுப்பினர்களையும் கேட்டு அமைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அரசினர் தனித்தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

---

### ஒரே ஆண்டில் 16 கலை அறிவியல் கல்லூரிகள் அறிவித்து

## அதே ஆண்டில் செயல்படுத்தி சாதனை படைத்தவர் முதல்வர்!

### பேரவையில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் பேச்சு!

சென்னை, ஜன.24-

தமிழ்நாட்டில் ஒரே ஆண்டில் 16 கலை அறிவியல் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கி, அதே ஆண்டில் அவைகளை செயல்படுத்த நடவடிக்கை எடுத்து சாதனை படைத்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று சட்டப்பேரவையில் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்தார்.

அமைச்சர் கோவி. செழியன் பேசியது வருமாறு:-

‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்ற சொற்றொடரை செயல் வடிவமாய் காட்டி இந்தியாவில் உயர் கல்வியில் முதலிடம் தமிழ்நாடு என்ற பெருமையை தமிழகம் தொடர்ந்து தக்கவைத்து வருகிறது. இந்த நிலையில் 20242025 ஆம் நிதி ஆண்டில் பண்ருட்டியில்டு முதலமைச்சர் அவர்கள் பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று பொதுமக்கள்



முன்னிலையிலேயே பண்ருட்டிக்கு அரசு கலைக் கல்லூரி வரும் என அறிவித்தார்.

அதை தொடர்ந்து 10 கல்லூரிகள், அதை தொடர்ந்து 5 கல்லூரிகள் ஒரே ஆண்டில் 16 கலை அறிவியல் கல்லூரிகளை ஏழை, எளிய நடுத்தர மாணவர்கள் படிப்பதற்கு தந்த தலைவர் தமிழக முதலமைச்சர் திராவிட மாடல் முதல்வர் அவர்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி 16 கல்லூரிகளும் சட்டப்பேரவையில் அறிவிப்பார்கள். அடுத்தடுத்த ஆண்டு துவக்குவார்கள். ஆனால், நான் அறிந்த வரை சட்டப்பேரவையில் அறிவித்து, அந்த ஆண்டே தற்காலிக இடம் தேர்வு செய்து, வகுப்புகள் தொடங்கப்பட்டு, மாணவர் சேர்க்கை முடிந்து, நிரந்தர கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்து நிரந்தர கட்டடம் கட்டுவதற்கும் 16 கல்லூரிகளில் 11 கல்லூரிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தந்த பெருமை தமிழக முதலமைச்சர் அவர்களை சாரும்; தமிழக அரசை சாரும். உறுப்பினர் சொன்ன கோரிக்கையை ஏற்று நிதி ஒப்படைப்பு செய்தாகிவிட்டது.

இட தேர்வில் வருவாய் துறை அமைச்சர் அவர்களும், வேளாண் துறை அமைச்சர் அவர்களும் கலந்துபேசி முடிவெடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார். முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துசென்று அதை செய்து தருவோம் என்ற உத்தரவாதத்தை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.





காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அறிமுகம் மற்றும் ஆலோசனை கூட்டம் கலைஞர் பவளவிழா மாளிகையில் மாவட்ட கழக செயலளார் க.சுந்தர் அவர்களின் தலைமையில் மாநில மாணவர் அணி துணை செயலாளர் ஜெ.ராமகிருஷ்ணன் அவர்களின் முன்னிலையிலும் மாவட்ட அமைப்பாளர் மு. குணசேகரன் மாவட்ட துணை அமைப்பாளர்கள் தி.இராம்பிரசாத் ஏ.வி.சுரேஷ்குமார் எஸ். தமிழ்செல்வன் சரளா தனசேகரன் எஸ்.சரண்ராஜ் இக்கூட்டம் நடைப்பெற்றது. இதில் மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் அமைப்பாளர்கள் & துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

### ‘டபுள் எஞ்சின்’ என்னும் ‘டப்பா எஞ்சின்’ தமிழ்நாட்டில் ஓடாது

## ஒன்றிய பா.ஜ.க. அரசின் தடைகளை தகர்த்தே தமிழ்நாடு வரலாற்று வளர்ச்சியை பெற்றுள்ளது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜன.24-

டபுள் என்ஜின் என்று சொல்லி பிரதமர் மோடி பேசியதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பக்கத்தில் பதிலளித்துள்ளார்.

அதில், ‘டபுள் எஞ்சின்’ என்னும் ‘டப்பா எஞ்சின்’ தமிழ்நாட்டில் ஓடாது என்றும், ஒன்றிய பா.ஜ.க. அரசின் அத்தனை தடைகளைத் தகர்த்தெறிந்து தான் தமிழ்நாடு வரலாற்று வளர்ச்சி அடைந்திருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**பிரதமர் சொல்லும் “டபுள் எஞ்சின்” எனும் “டப்பா எஞ்சின்” தமிழ்நாட்டில் ஓடாது!**

**மாண்புமிகு பிரதமர் அவர்களே...**

**ஒன்றிய பா.ஜ.க. அரசு ஏற்படுத்தி வரும் அத்தனை தடைகளையும் தகர்த்தெறிந்து தான் தமிழ்நாடு வரலாறு பேசும் வளர்ச்சியை அடைந்திருக்கிறது.**

**கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க...**

**நீங்கள் சொல்லும் “டபுள் எஞ்சின்” மாநிலங்களான உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், பீகாரைவிட, தமிழ்நாடு, கேரளா, தெலங்கானா, கர்நாடகா, மேற்கு வங்கம் என உங்கள் “டப்பா எஞ்சின்” நுழையாத மாநிலங்கள்தான் வளர்ச்சியில் கொடிகட்டிப் பறக்குது.**

**தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் பா.ஜ.க. செய்யும் துரோகங்களை, நீங்கள் மறைத்தாலும் #NDABetraysTN என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.**

**தில்லியின் ஆணவத்துக்குத் #தமிழ்நாடு_தலைகுனியாது!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.